9.2.2026

COS/எண்.8/2023

பி.வா.சா.1 முருகன் த/பெ. பெரியசாமி

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

முதல் பிரதிவாதி எங்கு இருக்கிறார் என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. முதல் பிரதிவாதிக்கு ஜாமீன் கையொப்பம் நான் செய்துள்ளேன் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் இல்லை. நான் முதல் பிரதிவாதியுடன் வங்கிக்கு ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டு தற்போது கடனை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக அந்த கையொப்பம் என்னுடையது அல்ல என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.8 வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு வந்தது அதை நான் வாங்கிக் கொண்டேன், நான் எந்த கடனும் வாங்கவில்லை என்பதால் நான் எந்த நடவடிக்கையும் அதற்கு எடுக்கவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் கடன் மற்றும் பொறுப்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அந்த விவரங்கள் உண்மையானது என்பதால் தான் நான் எந்த பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

நானும் முதல் பிரதிவாதியும் சேர்ந்து கொண்டு முதல் பிரதிவாதியை நான் மறைத்து வைத்து வங்கிக்கான தொகையை மோசடி செய்யவேண்டும் என்று பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு முதல் பிரதிவாதியை தெரியாது என்று பொய்யான சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் முதல் பிரதிவாதியும் கடன் தொகையை செலுத்த வேண்டும் என்றும் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/- P.Murugan

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.